**23.01.2025**

**MCOP.No. 34/2021**

**ம.சா.1 : கண்ணன்**

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) விபத்து சமயத்தில் நான் வாகனத்தை ஓட்டவில்லை. செங்குட்வேல் தான் வாகனத்தை ஓட்டிவந்தார். நான் வாகனத்தின் பின்புறம் அமர்ந்துவந்தேன். எதிரில் வந்த வாகனத்தை நான் எவ்வளவு தூரத்தில் பார்த்தேன் என்றால் 10 அடி தூரத்தில் பார்த்தேன். அது கார் வாகனம். இரு சக்கர வாகனத்தை ஓட்டியவர் தான் விபத்திற்கு காரணம் என்றால் சரியல்ல. அவர் சரியாக தான் ஓட்டிவந்தார்.

2) விபத்து நடந்த பின்னிட்டு கார் ஓட்டுநரை நான் பார்க்கவில்லை. அவர் போதையில் இருந்ததாக கேள்விப்பட்டேன். விபத்து சமயத்தில் காரை ஒட்டிவந்த ஓட்டுநர் சரவணன் போதையில் இருந்தாக சொல்லும் சமயத்தில் அந்த விபத்திற்கு காப்பீடு நிறுவனம் எவ்வித நஷ்டயீடும் கொடுக்க வேண்டியது இல்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு இரண்டு சக்கர வாகன ஓட்டுநர் காரணம் என்பதாலும் காரின் ஓட்டுநர் மதுவின் ஆதிக்கத்தில் இருந்து வந்தாலும் 2ம் எதிர்மனுதாரர் பொருத்து இந்த இழப்பீடு மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

3) இந்த விபத்தின் காரணமாக எனக்கு ஏற்பட்ட காயங்கள் காரணமாக எனக்கு எவ்விதமான உடல் ஊனமோ, வருமான இழப்போ ஏற்பட வில்லை என்றால் சரியல்ல.

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

4) நான் பயணித்த இரு சக்கர வாகனம் இப்கோ டோக்கியோ இன்சூரன்ஸ் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டது. நான் பயணித்த வாகனத்தை ஓட்டி சென்ற ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இருந்தது என்றால் சரிதான். இந்த விபத்திற்கு இழப்பீடு வழங்க 1, 2 எதிர்மனுதாரர்கள் தான் கடமைப்பட்டவர்கள் என்றும், 3ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு காரணம் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் தான் காரணம்.

5) இந்த விபத்திற்கான நஷ்டயீட்டை 1, 2 எதிர்மனுதாரர்கள் தான் தரவேண்டும் என்றால் சரிதான். 3ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரிதான்.

வழக்கறிஞர் வேண்டுகோளின் பெயரில் 1ம் எதிர்மனுதாரரை பொருத்து குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

**Sd/-S.Ganesan**
**Accidents Claim Tribunal,**
**Attur.**